அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல: 03/2015

எனது இல:PSC/DP/GEN/2013

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,

இல. 177, நாவல வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

2015 மே 25 ஆம் திகதி

சகல அமைச்சுக்களினது செயலாளர்களுக்கும்

திணைக்களத் தலைவர்களுக்கும்.

**<u>ஒழுக்காற்றுத் தண்டனையாக சம்பள ஏற்றங்களைப் பின்போடல்</u>**

ஒழுக்காற்றுத் தண்டனையாக சம்பள ஏற்றங்களை பின்போடும் போது, அத்தண்டனை நடைமுறைப்படுத்தப்படவேண்டிய குறிப்பிட்ட தினம் தொடர்பாக தீர்மானிப்பதில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு, பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு தீர்மானித்துள்ளது.

02. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23: 9 உட்பிரிவிற்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்று விதிக்கப்படுகின்ற போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் ஏற்புடைய குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்தே அது அமுல்படுத்தப்படல் வேண்டும்.

03. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 14: 12 உட்பிரிவிற்கு அமைய குற்றப் பத்திரமொன்று வழங்கப்பட்ட பின்னரே சம்பள ஏற்ற கொடுப்பனவு இடைநிறுத்தப்படல் வேண்டும். ஆகவே, குற்றம் புரியப்பட்ட தினத்திலிருந்து குற்றப்பத்திரம் வழங்கப்படும் தினம் வரையிலான காலப்பகுதிக்கு எவரேனுமொரு உத்தியோகத்தர் தனது சம்பள ஏற்றங்களை உழைத்துக்கொள்ள முடியும்.

04. எவரேனுமொரு உத்தியோகத்தர் குற்றம் புரிந்த தினத்திலிருந்து அவ்வாறு தனது சம்பள ஏற்றங்களை உழைத்துள்ள போதிலும், விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுத் தண்டனை சம்பள ஏற்றங்களைப் பின்போடுவதாக அமையுமிடத்து, அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23:9 உட்பிரிவிற்கு அமைய அது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 18/2013 மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:6 உட்பிரிவின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

05. அதற்கிணங்க, தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23:9 உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு அவர் அக்குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து ஒழுகாற்றுத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஆயினும், குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு அவர் அக்குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து குற்றப்பத்திரம் வழங்கப்படும் தினம் வரையிலான காலப்பகுதிக்குள் சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவருக்கு தண்டனை வழங்கும் பொருட்டு பின்போடப்பட்ட சம்பள ஏற்றங்கள் அவர் அக்குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து கணக்கிடப்பட்டு சம்பளத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

06. ஒழுக்காற்று கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள ஏற்றங்கள் பின்போடப்பட்ட பின்னர் அடுத்து வரும் தினத்திலிருந்து திருப்திகரமான சேவைக்காலம் கணக்கிடப்படல் வேண்டும் என்பதோடு, அது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 186 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கிடப்படல் வேண்டும்.

07. மேலும், ஒழுக்காற்றுத் தண்டனையின் ஒரு பகுதியாக சேவை இடைநிறுத்தஞ்செய்யப்பட்டிருந்த காலப்பகுதிக்குரிய சம்பள நிலுவையைச் செலுத்தாமலிருக்க பணிக்கப்பட்டிருக்குமிடத்து உத்தியோகத்தரின் சம்பள ஏற்றங்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24: 7 உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.எல்.சி. சேனாரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு

பிரதிகள் : மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்